සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education - NWP

## மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 09 - 2023 (2024)
## Third Term Test - Grade 09 - 2023 (2024)

## கர்நாடக சங்கீதம்

நேரம்: 2 மணி.

சுட்டெண்:

### பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**

1) சரியான விடையின் கீழ் கோடிடுக.

01. கும்மி, கோலாட்டம், கரகம் என்பன அடங்கும் வகை
 i. கதக் நடனம் ii. பரதநாட்டிய இசை
 iii. கிராமிய நடன இசை iv. கதகளி நடன இசை

02. 29வது மேள கர்த்தா இராகமாக அமையும் இராகம்
 i. மாயா மாளவ கௌளை ii. சங்கராபரணம்
 iii. கல்யாணி iv. தோடி

03. தாட்டு வரிசைகள் அமைந்துள்ள இராகமும் அதன் தாளமும்
 i. 1.மாயா மாளவ கௌளை - ஆதி ii. சங்கராபரணம் - ஆதி
 iii. சங்கராபரணம் - ரூபகம் iv. மாயா மாளவ கௌளை - ரூபகம்

04. சம்போமகாதேவா என்ற ஸ்வர ஜதியை இயற்றியவர்
 i. டி.வி பிச்சையப்பா ii. கே. பத்மநாதன்
 iii. வ.சு நவநீதன் iv. பொன்பரி வாமதேவன்

05. தேவாரப் பண்களில் பழந்தக்க இராகம் என அழைக்கப்படும் பண்ணிற்கு இணையான இராகம்
 i. ஆரபி ii. கமாஸ் iii. தோடி iv. பைரவி

06. திருவாசகத்தை அருளியவரும் அது பாடப்படும் பண்ணும்
 i. சுந்தரர்- செந்துருத்தி ii. சம்பந்தர்- கம்பீரநாட்டை
 iii. மாணிக்கவாசகர்- முல்லை iv. நாவுக்கரசர்- காந்தார பஞ்சமம்

07. தான தனத் தானத்தான தான தன தன தான என்னும் சந்த வரிகளை உடைய பாடல்
 i. சம்போமகாதேவா ii. காலனிடத் தணுகாதே
 iii. சாமிநாத அருள்வாயே iv. ஒடுங்கும் பிணிபிறவி

08. அப்பியாச கானத்தை சேர்ந்த உருப்படி யாயினும் ஸ்வரஜதி யாருடைய ஸ்வரஜதி சபாகானத்திற்கு ஏற்றதாக இருக்கும்
 i. புரந்தரதாசர் ii. தியாகராஜ சுவாமிகள்
 iii. முத்து தாண்டவர் iv. சியாமா சாஸ்திரிகள்

09. ஸரிகபதஸ, ஸ்தபகரிஸ எனும் ஆரோகண அவரோகணத்தை உடைய இராகம்
 i. பிலஹரி ii. மோகனம் iii. மலஹரி iv. மத்தியமாவதி

10. தம்புராவில் நாதம் கணீர என கேட்பதற்காக குதிரைக்கும் தந்திக்கும் இடையில் வைக்கப்படும் பட்டு நூல்
 i. ஜீவாளி ii.சீவாளி iii. நெளி iv. பிரடை

2) பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக

(மோகனம், மாயாமாளவகௌளை, 72, பாபநாசம் சிவன், 28)

1. ஜனக இராகங்களின் மொத்த எண்ணிக்கை .......................................... ஆகும்.
2. தேவாரப் பண்களின் இந்தளம் என அழைக்கப்படுவது .......................................... ஆகும்
3. பெற்றோர் "ராமையா" என பெயர் சூட்டிய வாக்கேயக்காரர் ..........................................ஆவார்
4. திருவாசகம் தொன்று தொட்டு பாடப்படுவது ..........................................இராகத்தில் ஆகும்
5. ஹரிகாம்போஜி இராகத்தின் மேள எண் .......................................... ஆகும்

3 சரியாயின் சரியெனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக

1. ஸ்வரஜதி அப்பியாச கான உருப்படி வகையை சார்ந்ததல்ல ( )
2. காவடிச்சிந்து என்னும் இசை உருப்படி நாட்டுப் பாடல் வகையை சேர்ந்ததாகும் ( )
3. திரியாங்கத்தையும் எடுத்துக் கொள்ளும் சப்த தாளமாக ஜம்பை தாளம் விளங்குகிறது ( )
4. பெருமாளே என்ற இறுதி பதத்துடன் நிறைவுறும் உருப்படி திருப்புகழ் ஆகும் ( )
5. தாட்டு வரிசைகளை இயற்றியவர் பாபநாசம் சிவன் ஆவார் ( )

## பகுதி II

**முதலாம் வினா கட்டாயமானது வேறு நான்கு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

1. மோகன இராகத்தின் ஆரோகண அவரோகணத்தை எழுதுக?
2. திருப்புகழ் பாடல்களை அருளிய மகான் யார்?
3. ஸ்வரப் பல்லவி என அழைக்கப்படும் உருப்படி எது?
4. ஸ்ரீராம ஸ்ரீராம எனும் திவ்ய நாம கீர்த்தனை அமைந்த ராகம் எது?
5. புரந்தரதாசரின் முத்திரை யாது?
6. ஸமகரி ' ஸரி ' கம " என ஆரம்பிக்கும் தாட்டுவரிசையில் இறுதி வரியை எழுதுக?
7. மாயாமாளவகௌளை ராகத்திள் அமைந்த மத்திம கால கீர்த்தனை ஒன்றின் முதல் அடியை எழுதுக?
8. சங்கராபரணம், மோகன ராகங்கள் ஹிந்துஸ்தானி இசையில் எவ்வாறு அழைக்கப்படும்?
9. தம்புராவில் காணப்படும் தந்தி களின் எண்ணிக்கை யாது?
10. கொம்புமுறி விளையாட்டின் முதற்கட்டமாக இடம்பெறுவது எது?

02.
1. ஸ்வரஜதியின் இலட்சணம் தொடர்பாக நான்கு அம்சங்களை எழுதுக?
2. ஸ்வரஜதிகளுக்கு இரண்டு உதாரணங்கள் தருக.
3. ஸ்வரஜதியை இயற்றிய வாக்கேயக்காரர் இருவர் பெயர்களை தருக.

03. 1. மோகன இராகத்தின் தாய் ராகம் அதன் மேள எண் ஆரோகண அவரோகணத்தையும் எழுதுக?

2. மோகன ராகத்தின் ஸ்வரஸ்தானங்களையும், இது சிறப்பாக கையாளப்படும் உருப்படி வகைகள் இரண்டும் குறிப்பிடுக.

3. மோகன இராகத்தின் விசேட அம்சங்கள் நான்கு எழுதுக.

04. கொம்புமுறி, ஊஞ்சல் பாடல்களின் கலாச்சார பின்னணி பற்றி விளக்குக? ஒவ்வொன்றுக்கும் ஆறு வாக்கியங்கள் எழுதுக.

05. பாபநாசம் சிவனின் வாழ்க்கை வரலாற்றையும் இசைப் பணியினையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.

1. வாழ்க்கை காலம்
2. பிறந்த இடம்
3. பெற்றோர் பெயர்
4. முத்திரை
5. இசைப் பணியும் இயற்றிய உருப்படிகளும்
6. பெற்ற பட்டங்கள்

06. 1. தம்புரா வாத்தியத்தின் வேறு பெயர்கள் இரண்டு எழுதுக?

2. தம்புராவின் நான்கு தந்திகளின் பெயர்களை தருக.

3. தம்புராவின் நான்கு தந்திகளிலும் சுருதி சேர்க்கப்படும் ஸ்வரங்கள் எவை?

4. தம்புராவின் படம் வரைந்து பாகங்களை குறிப்பிடுக.

07. நீர் கற்றுக்கொண்ட தாட்டு வரிசை ஒன்றினை ஸ்வரத்தாள குறியீட்டுடன் இராகம், தாளம் இயற்றியவரை குறிப்பிட்டு எழுதுக.

(4) WWW.PastPapers.WiKi (3)

Download Term Test Papers, Short Notes From One Place!

(4) WWW.PastPapers.WiKi (4)

Download Term Test Papers, Short Notes From One Place!

සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

# மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 09 - 2023 (2024)
# Third Term Test - Grade 09 - 2023 (2024)

## கர்நாடக சங்கீதம்

விடைப்பத்திரம்

### பகுதி I

1. iii
2. ii
3. i
4. i
5. i
6. iii
7. ii
8. iv
9. ii
10. i

2)
1. 72
2. மாயாமாளவகௌளை
3. பாபநாசம் சிவன்
4. மோகனம்
5. 28

3)
1. பிழை
2. சரி
3. சரி
4. சரி
5. பிழை

(40 புள்ளிகள்)

### பகுதி II

01.

1. ஸரிகபதஸ், ஸ்தபகரிஸ
2. அருணகிரிநாதர்
3. ஜதீஸ்வரம்
4. ஸஹானா
5. புரந்தர விட்டல
6. மஸரிக / மக / ரிஸ
7. தேவ தேவ கலயாமிதே
8. சங்கராபரணம் - பிலாவல்தாட் மோகனம் - பூப்
9. நான்கு
10. போர்த் தேங்காய் அடித்தல்

02.
1. ஸ்வர ஜாதி அப்பியாச கானத்தை சேர்ந்த உருப்படியாகும்.
   இதில் பல்லவி, அனுப்பல்லவி, சரணம் எனும் அங்க வித்தியாசங்கள் உண்டு
   சாஹித்தியம் பகவத் ஸ்தோத்திரமாகவோ, சிருங்கார விஷயமாகவோ, வீரர்களைப் பற்றியதாகவோ இருக்கும்.
   சரணங்கள் வித்தியாசமான தாதுக்களில் அமைந்திருக்கும்.
2. ராவேமேமகுவ - ஆனந்த பைரவி
   சாம்பசிவாயவே - கமாஸ்
3. சியாமாசாஸ்திரிகள்
   ஷோபனாத்திரி

03.
1. தாய் ராகம் - ஹரிகாம்போஜி
   மேள எண் - 28
   ஆரோகணம் - ஸரிகபதஸ்
   அவரோகணம் - ஸ்தபகரிஸ
2. ஸ்வரஸ்தானங்கள் - ஸட்ஜம் சதுஸ்ருதி ரிஷபம்
   அந்தர காந்தம் பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம்
   உருப்படி வகைகள் - திருவாசகம், சுலோகங்கள், பத்யங்கள், விருத்தங்கள்
3. இது ஒரு ஔடவ வர்ஜ இராகம்
   ஜண்டை ஸ்வர பிரயோகங்களும் தாட்டு ஸ்வர பிரயோகங்களும் இந்த ராகத்திற்கு இனிமையை கொடுக்கும்
   திரிஸ்தாயி இராகம், புராதன இராகம், சுபகரமாக இராகம் எப்பொழுதும் பாடலாம்.
   திருவாசகம் தொன்று தொட்டு இந்த ராகத்திலேயே பாடப்பட்டு வருகிறது.
   இசை நாடகங்களிலும் நிருத்திய நாடகங்களிலும் காணப்படும் இராகம்

(2) WWW.PastPapers.WiKi (1)
Download Term Test Papers, Short Notes From One Place!

04. கொம்பு முறி

இது மட்டக்களப்பு பிரதேசத்தில் விளையாடப்படும் ஒரு விளையாட்டு விழாவாகும. கண்ணகியின் கோபந்தனிய இளைஞர்களால் விளையாடப்பட்டதாக கூறப்படுகிறது கரையாக்கு எனும் ஒருவகை மரத்தினது கொம்புகளே இவ் விளையாட்டுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

வடசேரி கொம்பு பெரும்பாலும் 90 பாகைக்கு மேற்பட்ட வளைவுடையதாகவும் தென்சேரி கொம்பு அதனை விட ஒடுங்கியதாகவும் காணப்படும்.

கொம்பு முறி விளையாட்டின் முதற் குறியாக ஒரு கொம்பினை முறித்து விழாவை ஆரம்பித்து வைப்பர்.

ஊஞ்சல்

நம் நாட்டின் கிராமிய பகுதிகளிலும் இந்தியாவில் நெல்லை குமரி மாவட்டங்களிலும் ஊஞ்சல் ஆடுதல் இன்னும் நடைமுறையில் உள்ளது.

ஊஞ்சல் ஆடும்போது பாடும் பாடல்கள் இனிமையும் கலைநயமும் மிக்கனவாக இருக்கின்றன.

ஒன்று முதல் நான்கு பெண்கள் வரை அமர்ந்து கொண்டு கயிற்றை பலமாக பிடித்துக் கொண்டு ஆடுவர்.

திருவிழா திருக்கல்யாண உற்சவங்களில் இறைவன் இறைவியையும் ஊஞ்சலில் வைத்து ஆட்டி ஊஞ்சல் பாடல்கள் பாடப்படும்.

சில சமூகத்தில் திருமண விழாக்களில் தம்பதியரை ஊஞ்சலால் வைத்து வாழ்த்தும் வழக்கமும் உள்ளது.

திருவாசகத்தில் பொன்னூஞ்சல் பாடப்பட்டிருப்பதையும் நாம் காணலாம்.

05. 1. 1890 - 1973
2. பிறந்த இடம் - தஞ்சை மாவட்டம் போலகம் கிராமத்தில்
3. பெற்றோர் - ராமமிருத ஐயர், யோகம்பாள்
4. முத்திரை - ராமதாஸ
5. இசைப்பனி - இவரது பஜனைகள் திருவையாறு உற்சவங்களில் வருடாந்தம் இடம்பெற்று வந்தன, முதல் முதலில் உன்னை துதிக்க என்னும் கீர்த்தனையை இயற்றினார். பின் கிருதிகள், கீர்த்தனைகள், பதம், வர்ணம் என்பவற்றை இயற்றினார்.
சென்னை அடையாரில் உள்ள கலாஷேத்திரத்தில் சங்கீதம் போதிக்கும் பணியில் ஈடுபட்டார்.
400க்கு மேற்பட்ட உருப்படிகளை இயற்றியுள்ளார். 300 உருப்படிகள் கீர்த்தனை மாலை எனும் பெயரில் வெளியிடப்பட்டன.
திரைப்படங்களுக்கு பாடல்கள் இயற்றி இசை அமைத்தார்

6. பெற்ற பட்டங்கள் - சிவ புண்ணிய கலாமணி, சங்கீத சாகித்திய கலாமணி, இசை பேரறிஞர், சங்கீத கலாநிதி , பத்மபூஷன்

06. 1. தம்புரா தம்பூரி
2. 1. பஞ்சமம் 2. அனுஸாரணி 3. ஸாரணி 4. மந்திரம்
3. 1 வது தந்தி - மந்திரஸ்தாயி பஞ்சமம்
2 வது தந்தி - மத்தியஸ்தாயி ஸட்ஜம்
3 வது தந்தி - மத்தியஸ்தாயி ஸட்ஜம்
4 வது தந்தி - மந்திரஸ்தாயி ஸட்ஜம்
(ப ஸஸஸ) - என சுருதி சேர்க்கப்படும்.
4. தம்புராவின் படம் வரைந்து பாகங்கள் குறித்து இருப்பின் புள்ளி வழங்கவும். ஆசிரியர் அறிவுரை அறிவுரைப்பு வழிகாட்டி பக்கம் 80

07. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி பக்கம் 21

PAST PAPERS WIKI

(2) WWW.PastPapers.WiKi (2)



Download Term Test Papers, Short Notes From One Place!


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න